மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, ஏதேனும் ஒரு முறையைத்தான் கடைப்பிடிக்க முடியும். 'கல்லூரிகள் அல்லது கல்வி அலுவலகங்கள் இருக்கும் மாநகர், நகர்' என்று இருக்கிறது. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை 32 கிலோ மீட்டர் சுற்றுப்புற இடங்கள், மதுரை மாநகரத்தைப் பொறுத்தவரை 16 கிலோ மீட்டர் சுற்றுப்புற இடங்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் இருப்பவர்களுக்கு மட்டும் தான் வீட்டு வாடகைப்படி அளிக்கப்படுகிறது. கல்லூரிகள், கல்வி அலுவலகங்கள் இருக்கிற நகரங்கள் என்ற அடிப்படையில்தான் தர முடியுமே தவிர, கல்லூரிகள் மற்றவைகளெல்லாம் கிராமங்களில் இருந்து, அவற்றில் பணிபுரிகிறவர்கள் யார் யார் நகர்ப்புறங்களில் இருக்கிறார்கள் என்று தேடி, அந்தந்த நகரங்களில் உள்ளவர்களுக்குத் தருவது என்பது நடைமுறையில் சாத்தியப் படாது.

Pension for retired teachers

*27 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether this Government has any proposal to increase the pension for the retired teachers of the aided elementary schools in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இல்லை. ஆயினும், அண்மையில் தாராள ஓய்வூதிய விதிகளும், குடும்ப ஓய்வூதிய விதிகளும் கீழ்க்கண்டவாறு அரசுப் பள்ளி அல்லாத பள்ளி ஆசிரியர்களுக்கும் (Non-Government School teachers) விரிவாக்கப்பட்டுள்ளன.

(1) 2-10-1970 அன்றோ, அதற்குப் பின்னரோ வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்.

(2) 1-6-1970 அன்றோ அதற்குப் பின்னரோ (ஆனால் 2-10-1970க்கு முன்னதாக) ஓய்வு பெற்று, பள்ளி ஆண்டு 1970-71 முடிய வேலையில் நீடிக்கப் பட்டுள்ளவர்கள்.

மேற்கூறியவாறு விரிவாக்கப்பட்டுள்ளதால் எல்லா அரசுப் பள்ளி அல்லாத பள்ளி ஆசிரியர்களும், உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர் உட்பட, அதிக அளவில் ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர்களாகின்றனர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : துணைத் தலைவர் அவர்களே, 1960-ஆம் ஆண்டுக்கு முன்பு 'சரண்டர்' செய்யப்பட்ட தனியார்க் கல்லூரிகளில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறார்கள்.

1972 ஆகஸ்ட் 10]

அவர்களுக்கு எந்தவிதமான ஓய்வூதியமும் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த விதிகளிலே தயவுசெய்து அவர்களுக்கு ரூ. 30 அல்லது ரூ. 50 ஓய்வூதியம் கிடைக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தனிக் கேள்வி போட்டால் அது பற்றிய விவரங்கள் தரலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 2-10-1970க்குப் பின்னால் ரிடையர் ஆனவர்களுக்கு ஊதியம் என்று தந்த பிறகு, அதற்கு முன்னால் ரிடையர் ஆனவர்களுக்கு கூட தருவது பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஒவ்வொரு நகரசபைக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுபோல், 2—10—1970-க்கு முன்னால் ரிடையர் ஆனவர்களுக்கு ஏதாவது சலுகை அளிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆசிரியர்களைப் பற்றிய ஓய்வூதியத் தன்மைகள் பற்றியது மூலக் கேள்வி. அரசாங்கப் பள்ளி அல்லாத பள்ளியில் பணிபுரிகின்ற ஆசிரியர்களைப் பொறுத்து 1—6—1970 இலிருந்து 2—10—1970-க்குள் ஓய்வு பெற்றாலும் கூட இந்த விகிதத்தில் ஓய்வூதியம் பெற வாய்ப்பு இல்லை. ஆனால் 1—6—1970 அன்றோ அதற்குப் பின்னரோ (ஆனால் 2—10—1970-க்கு முன்னதாக) ஓய்வு பெற்று, பள்ளி ஆண்டு முழுவதும் வேலைக்கு இருப்பதைக் கணக்கு வைத்து, ஓய்வூதியம் மட்டும் அந்த அடிப்படையில் பெறலாம் என்று சலுகை அளிக்கப்படுகிறது. நகராட்சி மன்ற பள்ளிகளில் இருந்து ஓய்வு பெற்றவர்களைப் பொறுத்து தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: 1960-ம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு குறைவாகவும், அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு அதைவிட அதிகமாகவும் ஓய்வூதியம் தரப்படுகிறது. இந்த வித்தியாசம் நீக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால், அவர்களுக்கு குறைந்தபட்சம் ஓரளவுக்கு ஓய்வூதியம் தரும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. குறைந்த அளவு ரூ. 60 என்று கணக்கிட்டிருப்பதாக அறிகிறேன். தனிக் கேள்வி போட்டால் அதனுடைய முழு விவரங்களை அறிந்து சொல்லலாம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் நேரடியாக டிரஷரிக்கு வந்து தங்களுக்குரிய ஓய்வூதியத்தைப் பெறவேண்டும் என்ற முறையை மாற்றியமைத்து, அவர்களுக்கு 'மணி ஆர்டர்' மூலமாக தொகையை அனுப்புவதுபற்றி அரசு ஆலோசனை செய்திருக்கிறதா?

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கெனவே நேரடியாகத் தான் ஓய்வூதியத்தைப் பெறவேண்டும் என்ற நிலை இருந்தது. இப்பொழுது நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளவும், தேவையானால் 'மணி ஆர்டர்' மூல மாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக எனக்கு நினைவு. அண்மையில் அப்படி உத்தரவு போட்டதாக நினைவு. தனிக் கேள்வி போட்டால் திட்டவட்டமாகச் சொல்லலாம்.

அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள்

***28 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை எந்தெந்த வகைகளில் அரசு வழங்குகிறது?

(இ) அதற்கு மத்திய சர்க்கார் செய்யும் உதவி எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசியல் தியாகிகள் களின் குழந்தைகளுக்கு (1) கல்விக் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்தும் (2) புத்தகங்கள், கல்வி சிறப்புக் கட்டணம், விடுதிச் செலவு ஆகியவற்றிற்கு படிப்பு உதவித் தொகை வழங்கியும் சலுகைகள் காட்டப்படுகின்றன.

(இ) இதற்காக ஏற்படும் செலவினத்தில் 50 சதவிதத்தை மத்திய அரசு ஏற்கிறது.

திரு. என். கிட்டப்பா: மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற தியாகிகளுடைய குழந்தைகளுக்கும் கல்விச் சலுகை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மொழிப் போராட்டத்தில் தீக்குளித்து இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு ஓய்வூதியம் அளிக்கின்ற ஒரு முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள் அளிக்கும் முயற்சி எடுக்கப்படவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Education whether the list of political sufferers had been prepared separately by the State Government and concessions given or has it been prepared in consultation with the Central Government?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசினர் 50 சத விதம் வரை செலவினத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆகவே, அவர்களையும் கலந்தாலோசித்துத்தான் உத்தரவு வழங்கப்படுகிறது.